**அ.வ.எண். 253/2023**
**பி.வா.சா.1 : விஸ்வநாதன்**
**தேதி : 05.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். வாதிகள், உங்கள் தகப்பனார் ஆகியோர் இறந்துபோன சிதம்பணகவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வம்சாவழிப்பட்டியிலில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். உங்கள் தாத்தா வேலுசாமி பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். உங்கள் தாத்தா வேலுசாமிக்கு பக்கவாத நோய் பாதிப்பிற்காக கரூர், கோவை, மதுரை ஆகிய இடங்களில் சிகிச்சை செய்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக பிரிக்கப்படாத சொத்துக்கள் என்பதால் வாதிகளுக்கு சட்டப்படியாக பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல என் தாத்தா எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். உங்கள் தாத்தா உடல்நிலை சரியில்லததாலும், பக்கவாத நோய் பாதிப்பிலிருந்ததாலும் நல்ல மனநிலையில் இல்லாததால் நீங்கள் அதைப்பயன்படுத்தி வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டிர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாத்தா வேலுசாமி நல்ல மனநிலையில் இல்லாததால் அவர் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.4 ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளை ஏமாற்ற வேண்டும என்ற எண்ணத்தில் தான் வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி கிரையம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா வேலுசாமி இறக்கும் காலகட்டத்தில் நான் இளவராக இருந்தேன். நீங்கள் இளவராக இருந்ததால் உங்கள் தாத்தா வேலுசாமிக்கு எந்தெந்த மருத்துவமனையில் என்எனென்ன சிகிச்சையில் மேற்கொண்டீர்கள் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு வாதிகளின் பாகத்தை

கொடுக்கக்கூடாது என்பதற்காக வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.05 18:10:22 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.